பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**27 12 2025** **6 30**

சனிக்கிழமை மாலை

**<u>தலைப்புச் செய்திகள்</u>**

1. பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. மரங்களையும், நதிகளையும் பாதுகாப்பது நம் ஒவ்வொருவருரின் கடமை என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் நடைபெற்ற மருத்துவ முகாம்களில் இதுவரை 12 லட்சத்து 35 ஆயிரம் பேருக்கு முழு உடல் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

5. சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் - அங்கிதா ரெய்னா இணை பட்டம் வென்றது.

**--- இனி விரிவான செய்திகள் ---**

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள வானொலி நிலையங்கள் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

மரங்களையும், நதிகளையும் பாதுகாப்பது நம் ஒவ்வொருவருரின் கடமை என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் தனியார் பொறியியல் கல்லூரியில் இன்று நடைபெற்ற விவசாய கருத்தரங்கை தொடங்கி வைத்துப் பேசிய பேசிய அவர், தோட்டக்கலை சார்ந்த

விவசாயத்திற்கு அனைவரும் இணைந்து பெரும் பங்காற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

காவிரி ஆற்றின் முக்கியத்துவம் குறித்து பேசிய அவர், இந்த ஆற்றின் கரையோரங்களில் சத்குரு ஜக்கி வாசுதேவ் சார்பில் மரக்கன்றுகள் நடப்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார்.

அனைவரும் மரம் வளர்ப்பது, ஆறுகளைப் பாதுகாப்பது, விவசாயத்தை வளர்த்து மனித இனத்தைக் காப்பது என்ற முயற்சியில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கேட்டுக்கொண்டார்.

“நீடித்த விவசாயம் - ஒருமுறை நடவு, ஆயுள் முழுவதும் வரவு” என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இந்த விவசாய கருத்தரங்கு நடைபெற்றது.

<<<<>>>>

திருவண்ணாமலையில் 56 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு மாதிரி பள்ளிக் கட்டடம் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கான விடுதிகளை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

மாதிரிப் பள்ளியை நேரில் சென்று பார்வையிட்ட முதலமைச்சர், அங்கு மாணவ - மாணவியருடன் கலந்துரையாடினார்.

<<<<>>>>

தமிழகத்தில் நடைபெற்ற மருத்துவ முகாம்களில் இதுவரை 12 லட்சத்து 34 ஆயிரத்து 908 பேருக்கு முழு உடல் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னை கண்ணகி நகரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற மருத்துவ முகாமை இன்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 37 ஆயிரத்து 445 பேருக்கு காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பெரம்பலூர், காஞ்சிபுரம், நாகை உள்ளிட்ட 7 மாவட்டங்களில் மருத்துவ முகாம் முழுமையாக முடிவடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

எஞ்சிய 31 மாவட்டங்களின் 44 இடங்களில் இன்று மருத்துவ முகாம்கள் நடைபெற்றதாக அவர் தெரிவித்தார்.

இந்த முகாம்களில் பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம் உள்ளிட்ட 17 வகையான மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுவதாகவும் திரு. மாசு. சுப்பிரமணியன் கூறினார்.

<<<<>>>>

பருவம் தவறி பெய்த மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் விரைவில் வழங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதிய பேருந்து நிலையம் மற்றும் அரசு மருத்துவமனைக்கான கூடுதல் கட்டிடங்கள் அடுத்த மாதம் 15ஆம் தேதிக்குள் திறக்கப்படும் என்று தெரிவித்தார்.

மயிலாடுதுறை நகராட்சியில் பாதாள சாக்கடை பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் 83 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட இருசக்கர வாகனங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை திரு. மெய்யநாதன் வழங்கினார்.

<<<<>>>>

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு மற்றும் பெண்கள் பாதுகாப்பு சீர்குலைந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஆசிரியர்கள், செவிலியர்கள், அரசு ஊழியிர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என அனைவரும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராடி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

திமுக அளித்த தேர்தல் வாக்குறுதிகளில் எத்தனை நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி வினவியுள்ளார்.

<<<<>>>>

**வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான** ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கத்தில் கிராமப்புற மக்களுக்கு ஆண்டுக்கு **125** நாள் வேலை உத்தரவாதம் அளிக்கப்பட்டு இருப்பதற்கு பல்வேறு தரப்பினரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்த திட்டத்தின்கீழ் வேலை நாட்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது, தங்களது வாழ்வாதாரத்திற்கு பேருதவியாக இருக்கும் என்று தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பயனாளி - 30 செகண்ட்ஸ்)

<<<<>>>>

நடப்பாண்டில் மத்திய அரசு பல்வேறு வரலாற்றுச் சிறப்பு மிக்க சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இதில் சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு முக்கியமான சீர்திருத்த நடவடிக்கையாகும்.

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பின் மூலம் கட்டண விகிதங்கள் 5 மற்றும் 18 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது.

இதன் காரணமாக சிறு குறு தொழில்துறையினர், விவசாயிகள், தொழில்துறையினர் மற்றும் இல்லத்தரசிகள் பெரிய அளவில் பயனடைந்தனர்.

இந்த வரி குறைப்பு காரணமாக தீபாவளி மற்றும் நவராத்திரி பண்டிகைகளின்போது விற்பனை பல மடங்கு அதிகரித்தது.

ஆயுள் மற்றும் சுகாதார காப்பீட்டுத் திட்டங்களுக்கான வரிச் சலுகை பெரிய அளவில் சேமிப்பை பொதுமக்களுக்கு வழங்கியது.

இதேபோல் வருமான வரி விதிப்பிலும் நடுத்தர வர்க்கத்தினர் பயன்பெறும் வகையிலான சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய அரசு செயல்படுத்தியது.

ஆண்டுக்கு 12 லட்சம் வரை வருமானம் உள்ளவர்களுக்கு எவ்வித வரி விதிப்பும் இல்லை என்ற அறிவிப்பு பெரும் வரவேற்பை பெற்றது.

<<<<>>>>

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் நாளையும் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழகம் முழுவதும் 75 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் இந்த முகாம் நடைபெற்று வருகிறது.

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகளுக்குப் பின்னர் கடந்த 19ஆம் தேதி வெளியிட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்ள விரும்புவோர் அடுத்த மாதம் 18ஆம் தேதிக்குள் திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார்.

இறுதி வாக்காளர் பட்டியல் வரும் பிப்ரவரி மாதம் 17ஆம் தேதி வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் இன்று நடைபெற்ற இந்த முகாமில் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

<<<<>>>>

சபரிமலை ஐயப்பன் திருக்கோவில் மண்டல பூஜைக்குப் பின் இன்றிரவு 11 மணிக்கு இன்று மூடப்படுகிறது.

மகரவிளக்கு பூஜைக்காக வரும் 30ஆம் தேதி மாலை 5 மணிக்கு நடை மீண்டும் திறக்கப்படும் என்று திருவிதாங்கூர் தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

பந்தலத்தில் இருந்து ஐயப்பனின் திருவாபரண யாத்திரை வரும் ஜனவரி மற்றும் 12ஆம் தேதி தொடங்கும் என்றும், மகரவிளக்குப் பூஜை அடுத்த மாதம் 14ஆம் தேதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தாரம்பரம் - ராமேஸ்வரம் இடையே நாளை மறுநாள் சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

தாம்பரத்தில் இருந்து வரும் திங்கட்கிழமை இரவு 9 மணிக்கு புறப்படும் இந்த ரயில் விழுப்புரம் - திருச்சி - புதுக்கோட்டை வழியாக மறுநாள் காலை மணி 6.30க்கு ராமேஸ்வரம் சென்றடையும்.

மறுமார்கத்தில் ராமேஸ்வரத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை இரவு மணி 9.15க்கு புறப்படும் இந்த ரயில், புதன்கிழமை காலை 9 மணிக்கே தாம்பரைம் வந்தடையும்.

<<<<>>>>

தமிழகத்தில் அடுத்த 2 நாட்களுக்கு குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பைவிட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை குறையக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

**(Voice Byte - Senthamaraikannan - 40 Sec)**

<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரத்தில் உள்ள தனியார் கல்லூரியில் இன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மாநில அமைச்சர் திரு. காந்தி பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

--------------

திருப்பூரில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்திய **5** கடைகளுக்கு மாநகராட்சி அதிகாரிகள் **9** ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தனர்.

--------------

--------------

தென்காசி மாவட்டத்தில் ஈரநில பறவைகள் கணக்கெடுக்கும் பணியினை ஆட்சியர் திரு. கமல்கிஷோர் இன்று தொடங்கி வைத்தார்.

--------------

## *விளையாட்டுச் செய்திகள்*

சோலாப்பூரில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் - அங்கிதா ரெய்னா இணை பட்டம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை **4-6, 7-5, 10-6** என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Zeel Desai** - ரஷ்யாவின் **Elina Nepliy** இணையை வென்றது.

**<<<< The End >>>>**